# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கரூர்.

**முன்னிலை:-** திரு: எஸ்.பி.பரத்குமார், எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1 கரூர்

தமிழ் பராபவ வருடம், ஆனி மாதம் 11 ஆம் நாள்,
2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் நாள், வியாழக்கிழமை,

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.669/2025**

**CNR- TNKR02-004617-2025**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | Name of the court | Judicial Magistrate No.1,Karur. | | |
| 2. | Name of the Judge | Thiru.S.P.Barathkumar M.B.A.,L.L.M., | | |
| 3. | Date of Judgment | 25.06.2026 | | |
| 4. | Case Number along with CNR Number | CC NO 669/2025<br>CNR- **TNKR**02-004617-2025 | | |
| 5. | Name of the Parties of the case | Sub Inspector of police<br>Karur Town PS /Vs/<br>Guhan, S/o Chinnaiyan | | |
| 6. | Date of Occurrence | 21.09.2024 | | |
| 7. | Date of Complaint | 21.09.2024 | | |
| 8. | Date of Arrest if any and Remand | 22.09.2024 | | |
| 9. | Period of remand of the accused | NIL | | |
| 10. | Date of Release on bail | 01.10.2024 | | |
| 11. | Date of Final report | 16.12.2024 | | |
| 12. | Date of Committal of the case to the Court of Session | Nil | | |
| 13. | Date of questioning of the accused U/s. 228, 240, 246 and 251 of Code of Criminal Procedure | 23.06.2026 | | |
| 14. | Date of examination in Chief and Cross examination of the witness | No. of. Witness | Chief | Cross |
| | | PW-1<br>PW-2 | 25.06.2026<br>25.06.2026 | இல்லை<br>இல்லை |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts except routine petitions like petition under section 317 of the Code | Nil | | |
| 16 | Date of examination of the accused | 25.06.2026 | | |

| | | |
|---|---|---|
| | U/s. 313 of the Code | |
| 17. | Details of abscondence of an accused and his appearance/production as the case may be | Nil |
| 18. | Grant of stay by Superior Courts and the results thereof | Nil |
| 19. | Date of Commencement of Trial | 19.08.2025 |
| 20. | Date of closure of Trial | 25.06.2026 |
| 21. | Date of Sentence or order | 25.06.2026 |
| 22. | Date of service of copy of judgment to the accused | 25.06.2026 |
| 23. | If any delay, give explanation | Nil |

இவ்வழக்கானது கடந்த 23.06.2025 ஆம் நாள் இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, கடந்த 25.06.2026 ஆம் நாள் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, எதிரிதரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை மற்றும் அரசு தரப்பிற்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 கரூர் அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று 25.06.2026 ம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும்,

| | |
|---|---|
| புகார்தாரர் | Sub Inspector of police<br>Karur Town PS<br>கா.கு.எண்.683/2024 |
| எதிரியின் பெயர் | குகன்,<br>த/பெ.சின்னையன்,<br>12, வி.ஓ.சி முதல் தெரு,<br>கரூர் மாவட்டம். |
| அரசு தரப்பில் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 8(c), 20(b)(ii)(A) NDPS ACT 1985 |
| நீதிமன்றத்தால் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 8(c), 20(b)(ii)(A) NDPS ACT 1985 |
| எதிரியின் பதில் | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் முடிவு | குற்றவாளி |
| அரசு கூடுதல் குற்ற வழக்கறிஞர் | செல்வி முருகேஷ்வரி |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | ஆஜர் இல்லை |
| இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள் | 25.06.2026 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 25.06.2026 |

**<u>தீர்ப்புரை</u>**

கடந்த 21.09.2024 ம் தேதி 22.15 மணிக்கு கரூர்நகர காவல் நிலைய சரகம் கரூர் கருப்பாயி கோயில் இறக்கம் அமராவதி ஆற்றுப்படுகை அருகில் இவ்வழக்கின் எதிரியான குகன் என்பவர் தான் சுயலாபம் அடையும் பொருட்டு அரசுக்கு எதிராக சட்டவிரோதமாகவும், சமுதாயத்திற்கு சீர்கேட்டை ஏற்படுத்தக்கூடிய விதமாக 35 கிராம் எடையுள்ள கஞ்சாவை விற்பனைக்காக வைத்திருந்த குற்றம் புரிந்துள்ளதாகவும், எனவே எதிரியின் மீது U/s. 8(c), r/w 20(b)(ii)(A) NDPS ACT 1985 ன் கீழ் வழக்கு பதிவு செய்து மேற்படி வழக்கானது ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.669/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கில் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.207-ஆவது பிரிவின் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரி மீதான சட்டப்பிரிவு U/s. 8(c), 20(b)(ii)(A) NDPS ACT 1985 ன் படி குற்ற சாராம்சம் குறித்து எடுத்துக்கூறி வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்து, பொய் வழக்கு, என்றார். எனவே அரசுதரப்பு சாட்சிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அரசுதரப்பு சாட்சியின் விசாரணை தொடங்கியது.

4) இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையான சாட்சிகள் ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>5) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:-</u>**

i) **அ.சா.1** தனது சாட்சியத்தில், "நான் தற்போது கரூர் நகர காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.09.2024 ம் தேதி கரூர் நகர காவல் நிலையத்தில் மு.நி.காவலராக பணிபுரிந்தபோது, காவலர் சிலம்பரசன் மற்றும் உதவி ஆய்வாளர் நாகராஜன் ஆகியோருடன் 21.45 மணிக்கு கருப்பாயி கோவில் இரக்கம், அமராவதி ஆற்றுப்படுகை அருகே சந்தேக நபர் ஒருவர் கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் சந்தேக நபரை சோதனை செய்வதற்கும், கஞ்சா வைத்திருக்கும்பட்சத்தில் கைது செய்து வழக்கு பதிவு செய்யவும் காவல் ஆய்வாளரிடம் 22.00 மணிக்கு முன் தகவல் கடிதம் கொடுத்தும், அனுமதி

பெற்றும் கஞ்சா தடுப்பு ரோந்து அலுவலாக தக்க உபகரணங்களுடன் புறப்பட்டு மேற்படிஇடத்திற்கு சென்றபோது தகவலாளி தங்களிடம் சந்தேக நபரை அடையாளம் காட்டிவிட்டு மறைந்துகொள்ள போலிஸ் பார்ட்டி சகிதம் சென்று கையில் கவருடன் நின்றுகொண்டிருந்த அந்த நபரை பிடித்து விசாரித்தபோது அவரது பெயர் குகன் என்று கூறினார். அவர். ஆஜர் எதிரிதான். கையில் வைத்திருந்த பாலித்தீன் கவரை சோதனை செய்ய வேண்டும் எனவும், அதை நீதிபதி முன்போ, வருவாய் வட்டாட்சியர், டிஎஸ்.பி முன்போ சோதனை செய்ய வேண்டுமா என கேட்டபோது, உதவி ஆய்வாளரிடம் சோதனை சம்மதம் தெரிவித்ததால் சோதனை சம்மதக் கடிதத்தின் பேரில் 22.15 மணிக்கு சோதனை விருப்ப கடிதத்தில் கையொப்பம் பெற்று ஆஜர் எதிரிதான். அவர் கையில் வைத்திருந்த கவரில் கஞ்சா தூள் இருந்தது. அதை தராசில் எடை போட்டு பார்த்தபோது சுமார் 35 கிராம் கஞ்சாத்தூள் இருந்தது. அதை பற்றி மேற்படி நபரை விசாரித்தபோது திருச்சியில் அடையாளம் தெரியாத ஒரு நபரிடம் வாங்கி விற்பனைக்கு வைத்திருப்பதாக கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டதன்பேரில் கைதுக்கான காரணம் கூறி 22.25 மணிக்கு கைது செய்தும், பின் எங்கள் முன்னிலையில் தலா 10 கிராம் கஞ்சாத்தூளை ரசாயன பகுப்பாய்விற்காக SHO சீல் வைத்தும், 15 கிராம் கஞ்சாவை ஒரே பொட்டலமாக கட்டி 22.00 மணி முதல் 22.35 மணிக்கு தனிநபர் யாரும் முன்வராததால் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. என்னுடன் சிலம்பரசன் என்பவர் கையொப்பம் செய்தார். **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1.** பின்னர் எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் கொண்டவந்து, நிலைய கு.எண்.683/2024, ச.பி.8(C)20,(b),(II)(A) NDPS ன்படி வழக்கு பதிவு செய்தார். வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தோம்” என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

ii) **அ.சா.2** தனது சாட்சியத்தில், "நான் தற்போது கரூர் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கரூர் நகர காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் நாகராஜன் உடன் பணிபுரிந்த வகையில் அவர்களுடைய கையொப்பம் எழுத்து நடை நன்கு பரிட்சயம் என்பதால் அவர்களுக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 21.09.2024 ம் தேதி கரூர் நகர காவல் நிலையத்தில் மு.நி.காவலராக பிரதிபன் மற்றும் காவலர் சிலம்பரசன் மற்றும் உதவி ஆய்வாளர் நாகராஜன் ஆகியோருடன் 21.45 மணிக்கு கருப்பாயி கோவில் இரக்கம், அமராவதி ஆற்றுப்படுகை அருகே சந்தேக நபர் ஒருவர் கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் சந்தேக நபரை சோதனை செய்வதற்கும்,

கஞ்சா வைத்திருக்கும்பட்சத்தில் கைது செய்து வழக்கு பதிவு செய்யவும் காவல் ஆய்வாளரிடம் 22.00 மணிக்கு முன் தகவல் கடிதம் கொடுத்தும், அனுமதி பெற்றும் கஞ்சா தடுப்பு ரோந்து அலுவலாக தக்க உபகரணங்களுடன் புறப்பட்டு மேற்படிஇடத்திற்கு சென்றபோது தகவலாளி தங்களிடம் சந்தேக நபரை அடையாளம் காட்டிவிட்டு மறைந்துகொள்ள போலிஸ் பார்ட்டி சகிதம் சென்று கையில் கவருடன் நின்றுகொண்டிருந்த அந்த நபரை பிடித்து விசாரித்தபோது அவரது பெயர் குகன் என்று கூறினார். அவர் ஆஜர் எதிரிதான். அவர் கையில் வைத்திருந்த பாலித்தீன் கவரை சோதனை செய்ய வேண்டும் எனவும், அதை நீதிபதி முன்போ, வருவாய் வட்டாட்சியர், டிஎஸ்.பி முன்போ சோதனை செய்ய வேண்டுமா என கேட்டபோது, உதவி ஆய்வாளரிடம் சோதனை சம்மதம் தெரிவித்ததால் சோதனை சம்மதக் கடிதத்தின் பேரில் 22.15 மணிக்கு சோதனை விருப்ப கடிதத்தில் கையொப்பம் பெற்று ஆஜர் எதிரி கையில் வைத்திருந்த கவரில் கஞ்சா தூள் இருந்தது. அதை தராசில் எடை போட்டு பார்த்தபோது சுமார் 35 கிராம் கஞ்சாத்தூள் இருந்தது. அதை பற்றி மேற்படி நபரை விசாரித்தபோது திருச்சியில் அடையாளம் தெரியாத ஒரு நபரிடம் வாங்கி விற்பனைக்கு வைத்திருப்பதாக கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டதன்பேரில் கைதுக்கான காரணம் கூறி 22.25 மணிக்கு கைது செய்தும், பின் எங்கள் முன்னிலையில் தலா 10 கிராம் கஞ்சாத்தூளை ரசாயன பகுப்பாய்விற்காக SHO சீல் வைத்தும், 15 கிராம் கஞ்சாவை ஒரே பொட்டலமாக கட்டி 22.00 மணி முதல் 22.35 மணிக்கு தனிநபர் யாரும் முன்வராததால் போலிசார் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார். பின்னர் எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் கொண்டவந்து, நிலைய கு.எண்.683/2024, ச.பி.8(C)20,(b),(II)(A) NDPS ன்படி வழக்கு பதிவு செய்தார். **அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2. அந்த சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ.3.**பின்னர், கைப்பற்றிய மாதிரியை திருச்சி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்து அதன் அறிக்கையை பெற்றுள்ளார். **அந்த வட்டார தடய அறிவியல் ஆய்வறிக்கை அ.சா.ஆ.4.** சாட்சிகளான பிரதீபன், சிலம்பரசன், கலைவாணி, சத்யா ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் உதவி ஆய்வாளர் தனது புலன் விசாரணையை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்" என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6) எதிரியிடம், அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து எதிரிக்கு பாதகமாக அமைந்துள்ள சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313 (1) (ஆ) வின் கீழ் விளக்கி வினவியபோது, எதிரி பொய் சாட்சி, பொய் வழக்கு என்றார். எதிரி தரப்பில் சாட்சிகள்

இல்லை என்றார்.

**<u>7) பிரச்சனைக்குரிய தீர்வு:-</u>**

கடந்த 21.09.2024 ம் தேதி 22.15 மணிக்கு கரூர்நகர காவல் நிலைய சரகம் கரூர் கருப்பாயி கோவில் இறக்கம் அமராவதி ஆற்றுப்படுகை அருகில் இவ்வழக்கின் எதிரியான குகன் என்பவர் தான் சுயலாபம் அடையும் பொருட்டு அரசுக்கு எதிராக சட்டவிரோதமாகவும், சமுதாயத்திற்கு சீர்கேட்டை ஏற்படுத்தக்கூடிய விதமாக 35 கிராம் எடையுள்ள கஞ்சாவை விற்பனைக்காக வைத்திருந்த குற்றம் புரிந்துள்ளதாகவும், எனவே எதிரியின் மீது U/s. 8(c), r/w 20(b)(ii)(A) NDPS ACT 1985 ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளதாக அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றத்தினை நிரூபிக்கும் முகமாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் மற்றும் இருதரப்பு வாதங்களையும் பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டது.

8) இவ்வழக்கில் எதிரி கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருந்ததாக காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கரூர்நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் நாகராஜன், அ.சா.1 மு.நி.கா பிரதீபன், காவலர் சிலம்பரசன் ஆகிய மூவரும் மதுவிலக்கு அமலாக்க குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக கரூர்நகர காவல் சரகத்தில் சென்று கொண்டிருந்த போது, உதவி ஆய்வாளர் நாகராஜன் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி கரூர் கருப்பாயி கோவில் இறக்கம் அமராவதி ஆற்றுப்படுகை அருகில் சென்றபோது அங்கே சந்தேகப்படும்படியாக அடையாளம் தெரிந்த ஒரு நபர் ஒரு பாலித்தீன் கவருடன் ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரித்த போது அவரது பெயர் குகன் என்றும் மற்றும் அவரிடமிருந்து சுமார் 35 கிராம் எடையுள்ள கஞ்சாவை கைப்பற்றியதாகவும், மேற்படி அ.சா.1 சாட்சியமளித்துள்ளார்.

9) மேலும் அ.சா.1, எதிரியின் கையில் வைத்திருந்த பையை சோதனை செய்தபோது அதில் 35 கிராம் பச்சை மற்றும் பழுப்பு நிறத்தில் இலைகள் மற்றும் விதைகளுடன் கூடிய கஞ்சா இருந்தது என்றும், அதை தன் முன்னிலையில் உதவி ஆய்வாளர் நாகராஜன் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியதாகவும் சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் பொதுமக்கள் சாட்சிகள் யாரும் முன்வராத சூழ்நிலையில் போலிசாரே இவ்வழக்கில் மேற்படி கஞ்சா துகள்களை கைப்பற்றியுள்ளதும் மேற்படி ஆவணங்களைப் பரிசீலிக்கையில் தெரியவருகிறது. சம்பவ இடமானது கரூர் கருப்பாயி கோவில் இறக்கம் அமராவதி ஆற்றுப்படுகை அருகில் நடந்துள்ளது என்றும்

மற்றும் எதிரியிடமிருந்து கஞ்சாவை கைப்பற்றிய நேரம் 22.35 மணி என்பதும் தெரியவருகிறது. அங்கு பொது மக்கள் யாரும் இல்லாத நிலையில் போலிசாரே இருந்து எதிரியிடமிருந்து கஞ்சாவை கைற்றப்பற்றியுள்ளார்கள் என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவே உள்ளது. பகுப்பாய்வு அறிக்கையில் கைப்பற்றப்பட்ட பொருள் கஞ்சா என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி சார்பாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 உதவி ஆய்வாளர் திரு.பாபு அவர்களும் அ.சா.1 ன் சாட்சியத்தினை அனுசரித்து சாட்சியமளித்துள்ளார். மேலும் இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யவில்லை. மேற்படி குறுக்கு விசாரணை செய்யாததால், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரின் சாட்சியங்களை எதிரி தரப்பில் ஏற்றுக் கொண்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

10) எனவே, மேற்கண்டவாறு வழக்கின் சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்த வகையிலும் எதிரி மீதான பிரிவு- 8(c), r/w 20(b)(ii)(A) of NDPS Act -ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

11) முடிவில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான ச/பி. 8(c), r/w 20(b)(ii)(A) of NDPS Act ன் கீழான குற்றமானது சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிருப்பிக்கப்பட்டுள்ளது என முடிவு செய்து எதிரிக்கு ச/பி. 8(c), r/w 20(b)(ii)(A) of NDPS Act பிரிவின் கீழான குற்றத்திற்கு 10 நாட்கள் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும் மற்றும் அபராதம் ரூ.1,000/- விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் மேலும் 1 மாத காலம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும் 271(2) BNSS ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. மேலும் எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த காலமான 22.09.2024 முதல் 01.10.2024 வரையிலான 10 நாட்களை மேற்படி தண்டனை காலத்திலிருந்து கழித்துக்கொள்ள 468 BNSS ன் படி உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதம் தொகை **ரூ.1,000/-** .

12) இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **R.P.No.**188/2024 ல் **கண்டுள்ள 35 கிராம்** அளவுள்ள போதைப் பொருளான கஞ்சாவை மேல்முறையீட்டு காலக்கெடுவிற்குப் பின்னிட்டு காவல் உதவி ஆய்வாளரிடம்

ஒப்படைத்து உரிய முறையில் அழித்து அதற்கான ஒப்புதலை நீதிமன்றத்தில் அளிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 25.06.2026 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப்பகரப்பட்டது.

BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR Date: 2026.06.25 19:57:58 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்:-**

| **அரசுதரப்பு சாட்சிகள்** | **சாட்சிகளின் பெயர்** | **விவரம்** |
|---|---|---|
| அ.சா.1 | திரு.பிரதீபன், முதல்நிலைக்காவலர் | சம்பவத்தின் போது உடனிருந்த சாட்சி |
| அ.சா.2 | திரு. பாபு, காவல் உதவி ஆய்வாளர் | புலன்விசாரணை அதிகாரி(சார்பு) |

**அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :-**

| **அரசுதரப்பு ஆவணங்கள்** | **ஆவணங்களின் விவரம்** | **யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது** |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | முதல்தகவல் அறிக்கை | அ.சா.2 |
| அ.சா.ஆ.3 | சோதனை சம்மதக்கடிதம் | அ.சா.2 |
| அ.சா.ஆ.4 | பகுப்பாய்வு அறிக்கை | அ.சா.2 |

BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR Date: 2026.06.25 19:58:09 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**CC No**.669/2025 நாள் : 25.06.2026

**எதிரி ஆஜர். தீர்ப்பு அவையறிய பகரப்பட்டது.**

முடிவில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரியின் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான ச/பி. 8(c), r/w 20(b)(ii)(A) of NDPS Act ன் கீழான குற்றமானது சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிருப்பிக்கப்பட்டுள்ளது என முடிவு செய்து எதிரிக்கு ச/பி. 8(c), r/w 20(b)(ii)(A) of NDPS Act பிரிவின் கீழான குற்றத்திற்கு 10 நாட்கள் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும் மற்றும் அபராதம் ரூ.1,000/- விதித்தும், அபராதம் கட்டத்தவறினால் மேலும் 1 மாத காலம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும் 271(2) BNSS ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. மேலும் எதிரி ஏற்கனவே சிறையில் இருந்த காலமான 22.09.2024 முதல் 01.10.2024 வரையிலான 10 நாட்களை மேற்படி தண்டனை காலத்திலிருந்து கழித்துக்கொள்ள 468 BNSS ன் படி உத்தரவிடப்படுகிறது. மொத்த அபராதம் தொகை ரூ.1,000/- .

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **R.P.No**.188/2024 **ல் கண்டுள்ள** 35 **கிராம்** அளவுள்ள போதைப் பொருளான கஞ்சாவை மேல்முறையீட்டு காலக்கெடுவிற்குப் பின்னிட்டு காவல் உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்து உரிய முறையில் அழித்து அதற்கான ஒப்புதலை நீதிமன்றத்தில் அளிக்க உத்தரவிடப்படுகிறது.

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR
Date: 2026.06.25 19:58:22 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

| | |
|---|---|
| | |